**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 581 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 10** |
| **Name** | : | **திருமதி. கவிதா** |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.02.2024**

எதிரிகள் 1,2 ஆஜர். எதிரிகள் 3 முதல் 6 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் கீழகுயில்குடியில் ஒத்தவீட்டில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். ஆஜர் எதிரிகளும் நானும் ஒரே ஊரில்தான் குடியிருக்கிறோம். இந்த வழக்கில் இறந்து போன சிவப்பிரியா என்பவர் ரோட்டுக்கு அந்த பக்கம் குடியிருந்தார்கள். நான் ரோட்டிற்கு இந்த பக்கம் குடியிருக்கிறேன். சிவப்பிரியா எவ்வாறு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. சிவப்பிரியாவிற்கும் அவரது கணவருக்கும் இடையே என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. சிவப்பிரியா இறந்த மறு நாள் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

**அரசு தரப்பில் கு.வி.**

போலிசார் விசாரணையின் போது, கடந்த 07.09.2016 ம் தேதியன்று நாகமலைபுதுக்கோட்டை மாவுமில் பஸ்டாப்பில் சிவப்பிரியாவிற்கும் ஆஜர் 1 வது எதிரிக்கும் திருமணம் நடைபெற்றது என்றும், கள்ளர் இன முறைப்படி சீர்வரிசைகள் செய்தார்கள் என்றும் இந்நிலையில் நாகமலைபுதுக்கோட்டையில் ஆட்டோ ஓட்டி வந்த ஆஜர் 1 வது எதிரி, சிவப்பிரியாவின் நகைகளை அடகு வைத்து, தவணைக்கு கொடுத்து வாங்க வேண்டும் என்று நகைகளைக் கேட்டதாகவும், அதற்கு சிவப்பிரியா தனது நகைகளைக் கொடுக்க மறுத்ததாகவும் அதனால் கோவித்துக்கொண்டு பெருமாள்பட்டியில் உள்ள தனது தாயார் வீட்டிற்கு சென்றதாகவும், பின்னர் ஆஜர் 1 வது எதிரி குடும்பத்தினர் சமாதானம் செய்ததன் பேரில் அவர் திரும்ப வந்ததாகவும் கடந்த 04.02.2017 ம் தேதியன்று சிவப்பிரியா எதிரிகள் வீட்டில் இருந்த போது தூக்குப்போட்டு இறந்ததாகவும் கடைசியாக அவரைப் பார்த்ததாகவும் அவர்கள் சிவப்பிரியாவிற்கு உயிர்இருப்பதாகச் சொன்னதாகவும், அதனால் சிவப்பிரியாவை ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்றதாகவும், அங்கு மருத்துவர்கள் அவரை பரிசோதித்து விட்டு இறந்துவிட்டதாகச் சொன்னார்கள் என்றும் சிவப்பிரியாவின் தாயாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு அவர் வந்து பார்த்துவிட்டு மயக்கப்பட்டு விழுந்துவிட்டார் என்றும், இதற்கிடையில் சாந்திபூசன், சின்னச்சாமி, மலைச்சாமி, ஜெயபாண்டி, சிவப்பிரியாயின் கணவர் விருமாண்டி ஆகியோர் இறந்த சிவப்பிரியாவை உடனடியாக மயாணத்திற்குக் கொண்டு சென்று எரித்துவிட்டார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் எனது ஊர்க்காரர்கள் என்றும் அதனால் எதிரியைக் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்றவேண்டும் என்பதற்காக உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை